## 2.21 2007–2008 – சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் – கூடுதல் வழிகாட்டி நெறிமுறைகள்

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (மாஅதி.2) துறை

அரசாணை (நிலை) எண். 64 நாள் : 17.5.2007

படிக்க :

1. அ.ஆ.(நி) எண். 84, ஊ.வ.(ம) ஊரா. துறை நாள் 25.7.2006
2. அ.ஆ.(நி) எண். 134, ஊ.வ.(ம) ஊரா. துறை நாள் 29.9.2006
3. அ.ஆ.(நி) எண். 173, ஊ.வ.(ம) ஊரா. துறை நாள் 29.11.06
4. ஊ.வ.(ம) ஊரா. இயக்குநரின் நேர்முக கடிதம் எண் 51100/என்.இ.டி.எம் 3. நாள் 22.4.2007 மற்றும் 30.4.2007

**ஆணை**

அரசாணை (நிலை) எண். 84 ஊரக வளர்ச்சி .மற்றும் ஊராட்சித் துறை, நாள் 25–7–06ல் 2006–2007ம் ஆண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டன. இந்த அரசாணையில், இத்திட்டத்தில் வரையறுக்கப்பட்ட 50 சதவீதம் நிதியை கட்டாயப் பணிகளுக்கும் மீதமுள்ள 50 சதவீதம் நிதியை வரையறுக்கப்படாத சட்டமன்ற உறுப்பினரின் விருப்ப நிதியாக வகைப்படுத்தியும் தடைசெய்யப்பட்ட பணிகளின் பட்டியலுடன் ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. அரசாணை (நிலை) எண். 134 ஊ.வ.(ம) ஊ. துறை 29.9.06ல் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி ஒன்றுக்கு ரூ. 1.00 கோடி என்றிருந்ததை ரூ. 1.20 கோடி என உயர்த்தியும், வரையறுக்கப்படாத நிதியில் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் தலா ஒரு கணினி, பிரிண்டர் மற்றும் அகண்ட அலைவரிசை இணையம் இணைப்பு வசதிகளைப் பெற்றுக் கொள்ள அனுமதி அளித்து ஆணைகள் வெயிடப்பட்டன.

3. அரசாணை (நிலை) எண். 173 ஊ.வ.(ம) ஊ. துறை நாள் 29.11.06ல் இத்திட்டத்தின் கீழ் தூர் வாரும் பணிகளை தடைசெய்தும் கால்வாய், வாய்க்கால் ஆகியவற்றின் கரைகளை நிபந்தனைக்குட்பட்டு பலப்படுத்துதல் மற்றும் அகலப்படுத்துதல் போன்ற பணிகளை செய்திடவும், பேரூராட்சி பகுதிகளில் வசிக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான தனி வீடுகள் கட்டுவதற்கும், பேரூராட்சிகளில் 10 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட தொகுப்பு வீடுகள் மற்றும் கச்சா வீடுகளை பழுதுநீக்கம் செய்வதற்கும் அனுமதியளித்து ஆணைகள் வெளியிடப்பட்டன.

4. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 12.4.2007 அன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்புகளில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட நிதியான ரூ. 60.00 லட்சத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய பணிகள் குறித்தும் அறிவிக்கப்பட்டுள்ளன. மேலும் திட்ட வழிகாட்டு நெறி முறைகளுக்குத் தக்க திருத்தம் வெளியிடுவது குறித்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் படிக்கப்பட்டவை நான்கில் உள்ள கடிதங்களில் முன்மொழிவுகளை அனுப்பி வைத்து அரசாணை வெளியிடக் கோரியுள்ளார்.

5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் முன்மொழிவுகளை அரசு கவனமாக பரிசீலனை செய்தது. 2007–2008ம் ஆண்டுக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட செயலாக்கத்திற்கு தொகுதி ஒன்றுக்கு என ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 1.20 கோடி நிதியில் வரையறுக்கப்பட்ட நிதியான ரூ. 60.00 லட்சத்தில் பின்வரும் பணிகளை மேற்கொள்ளலாம் என அரசு ஆணையிடுகிறது.

அ) ஊரகப் பகுதிகளில்

1. கப்பிச் சாலைகளை தார்சாலையாக மேம்படுத்துதல் / தார் சாலைகளை புதுப்பித்தல்.
2. சிமெண்ட கான்கிரீட் சாலைகள் அமைத்தல்.

ஆ) நகர்ப்புறப் பகுதிகளில்

1) கப்பிச் சாலைகளை தார்சாலையாக மேம்படுத்துதல்/தார் சாலைகளை புதுப்பித்தல்

2) சிமெண்ட கான்கிரீட் சாலைகள் அமைத்தல்.

3) தேவையின் அடிப்படையில் மழைநீர் வடிகால் வசதிகளுடன் கூடிய சிமெண்ட
கான்கிரீட் நடைபாதைகள் அமைத்தல்

ஊரகப் பகுதிகளில் சம்மந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் அவர் விருப்பத்தின் அடிப்படையில் தார் சாலையையோ அல்லது சிமெண்ட் கான்கிரீட் சாலைகளையோ எந்த விகிதாசாரத்தின் அடிப்படையிலும் செய்து கொள்ளலாம் (10 இலட்சம் : 50 இலட்சம் அல்லது 20 இலட்சம் : 40 இலட்சம் அல்லது 35 இலட்சம் : 25 இலட்சம் என்று பல்வேறு விகிதத்தில்) மீதமுள்ள வரையறுக்கப்படாத நிதியான ரூ.60.00 இலட்சத்தில் தடை செய்யப்பட்ட பணிகளைத் தவிர மற்ற எந்தப் பணியினையும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் எடுத்துச் செய்யலாம் எனவும் உத்தரவிடப்படுகிறது.

6. படிக்கப்பட்டவை ஒன்றில் உள்ள அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள 13 வகையான பணிகள் தடை செய்யப்பட்டவையாக தெரிவிக்கப்பட்டபோதிலும், கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் வரையறுக்கப்படாத நிதி ஒதுக்கீடான ரூ.60.00 இலட்சத்தில் சிறப்பினமாக எடுத்துச் செய்ய அனுமதிக்கலாம் எனவும் ஆணையிடப்படுகிறது.

அ. கிராம ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வசிக்கும் ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைச் சார்ந்த பயனாளிகளுக்காக தனி நபர் வீடு / தொகுப்பு வீடுகள் இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தில் கட்டப்படும் வீடுகளைப் போன்று எடுத்துச் செய்யலாம்.

ஆ கிராம ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வசிக்கும் ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த பயனாளிகளுக்காக இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தில் கட்டப்பட்ட கச்சா வீடுகளை மேம்பாடு செய்தல் போன்றே இந்தத் திட்டத்திலும் கச்சா வீடுகளை மேம்படுத்தலாம்.

இ கிராம ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் அரசு திட்டங்களில் 1997ம் ஆண்டு வரை கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை ஒரு வீட்டிற்கு ரூபாய் பத்தாயிரத்திற்கு மிகாமல் ஒதுக்கீடு செய்து பழுது நீக்கம் செய்யலாம்.

ஈ எல்லாவிதமான அரசு மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு கால்நடை மருத்துவமனைகள் ஆகியவைகளுக்கு கட்டிடம் கட்டிக் கொடுத்தல், சுற்றுச் சுவர் அமைத்தல், தளவாட சாமான்கள் மற்றும் உபகரணங்களை வாங்கி வழங்கலாம்.

உ ஊராட்சி ஒன்றிய / அரசு பள்ளிகள் மற்றும் அரசு கல்லூரிகள் ஆகியவைகளுக்கு கட்டிடம் கட்டிக் கொடுத்தல், சுற்றுச் சுவர் அமைத்தல் தளவாட சாமான்கள் மற்றும் உபகரணங்கள் வாங்கி வழங்கலாம்.

ஊ பொது விநியோகக் கடைகள், நேரடி கொள்முதல் நிலையங்கள், கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்க கட்டிடங்கள், மொத்த குளிர்பதன மையக் கட்டிடம் கட்டுதல் ஆகிய பணிகளை எடுத்துச் செய்யலாம்.

ஏ நகர்ப்புற பகுதிகளில், 1997ம் ஆண்டு வரை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மற்றும் தாட்கோ போன்ற அரசு நிறுவனங்களால் கட்டப்பட்டு பழுதடைந்துள்ள வீடுகளை, சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினரின் பரிந்துரையுடன், ஒரு வீட்டிற்கு அதிகபட்சமாக ரூ.10,000/– வரை பழுது நீக்கும் பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது. இந்தப் பணிகள் மேற்கொள்ளும் முன்பு சம்பந்தப்பட்ட குடிசை மாற்று வாரியம் மற்றும் வீட்டுவசதி வாரியத்திடம் அனுமதிச் சான்று பெற்று பணியினை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்